# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**20-11-2022**

**Wesite Link :** https://gkrsinstitute.com/

**Telegram Link :** https://t.me/gkrsInstitute

**Faceook Link :** https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மத்திய செய்திகள்

### 1. முதல் பசுமை விமான நிலையம்

- அருணாசல பிரதேசத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள முதல் பசுமை விமான நிலையம் மற்றும் கமெங் நீர்மின் நிலைய திட்டங்களை பயன்பாட்டுக்கு திறந்து திறந்துவைத்தார் பிரதமர்.
- அருணாசல பிரதேச தலைநகர் இடாநகரிலிருந்து 15 கி.மீ. தொலைவில் புதிய 'டோனி போலோ விமான நிலையம் கட்டப்பட்டுள்ளது.
- இந்த விமான நிலையத்துக்கு கடந்த 2019-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பிரதமர் அடிக்கல் நாட்டிய நிலையில், அதனை தற்போது பயன்பாட்டுக்கு பிரதமர் திறந்துவைத்தார்.
- இந்த விமான நிலையம் ரூ.645 கோடி செலவில் சுட்டப்பட்டுள்ளது.
- அதுபோல, மாநிலத்தின் **மேற்கு கமெங் மாவட்டத்தில்** ரூ. 8,450 கோடி, செலவில் கட்டப்பட்டுள்ள 600 மெகா வாட் மின் உற்பத்தித்திறன் கொண்ட கமெங் நீர்மின் நிலையத்தையும் பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

### 2. காசி- தமிழ் சங்கமம்

- காசியும் தமிழகமும் காலத்தால் அழியாத நமது கலாசாரம் மற்றும் நாகரிகத்தின் மையங்க ளாகும்.
- இவ்விரு பகுதிகளுமே சமஸ்கிருதம், தமிழ் என உலகின் தொன்மையான மொழிகளின் மையங்களாக திகழ்கின்றன' என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.
- 'காசி - தமிழ் சங்கமம்' எனும் பெயரில் **ஒரு மாத கால நிகழ்ச்சிகள்** வாராணசியில் ( காசி) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சிகளை, வாராணசியில் பிரதமர் மோடி முறைப்படி தொடக்கி வைத்து உரையாற்றினார்.
- சப்தபுரி எனப்படும் ஹிந்துக்களின் **7 முக்கிய யாத்திரை தலங்களில்** காசிக்கும் தமிழகத்தின் காஞ்சிக்கும் முக்கிய இடம் உண்டு.
- **காசியின் வளர்ச்சிக்கு தமிழகத்தின் பங்களிப்பு:**
  - ✓ ராமானுஜாச்சாரியார், சங்கராச்சாரியார் தொடங்கி ராஜாஜி, சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் வரை காசியின் வளர்ச்சிக்கு பங்களித்துள்ளனர்.
  - ✓ பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழக துணைவேந்தராக ராதாகிருஷ்ணன் பணியாற்றியுள்ளார்.
  - ✓ சுவாமி குமரகுருபரர், மொழி மற்றும் அறிவுத் தடையை உடைத்து, காசியை தனது கர்ம பூமியாக ஆக்கிக் கொண்டதுடன், காசியில் கேதாரரேஸ்வர் கோயிலைக் கட்டினார். பின்னர், அவரது சீடர்கள் தஞ்சாவூரில் காவிரி நதிக்கரையில் காசி விஸ்வநாதர் கோயிலைக் கட்டினர்.

## மாநில செய்திகள்

### 1. 55 ஆவது தேசிய நூலக வார விழா

- பொது நூலகத் துறையில் 33 ஆண்டுகள் நூலகராக திறம்பட பணியாற்றிய வே.தணிகாசலத்துக்கு **நூலகத் தேனீ விருது** ஆகியவற்றையும் அவர் வழங்கினார்.
- **நூல்கள் வெளியீடு**:
  - ✓ இதைத் தொடர்ந்து **அசஸ்வரன்** எழுதிய 'உயிரின் தானம், **மோ.ரவீந்திரன்** எழுதிய உயிர் ஆடும் திகிலாலே, **அக்கினி பாரதி** எழுதிய குருதியில் பூக்கும் நிலம் ஆகிய நூல்களை அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் தேசியத் தலைவர் முனைவர் கோ.பெரியண்ணன் வெளியிட்டார்.
- தமிழக அரசின் நூலக நண்பர்கள் திட்டம் சென்னையில் டிச 1.-ஆம் தேதி தொடக்கப்படும்
  - ✓ நூலக வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையிலும், நூலகங்களுக்கு வர முடியாத மாற்றுத் திறனாளிகள், முதியவர்கள் உள்ளிட்டோர், வீடுகளில் இருந்தே நூல்களை வாசிக்க உதவும் வகையில் நூலக நண்பர்கள் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.

## விருது

### 1. மகாத்மா காந்தி- மண்டேலா விருது

- திபெத்திய பௌத்த மதகுரு தலாய் லாமாவுக்கு மகாத்மா காந்தி மண்டேலா விருதை ஹிமாசல பிரதேச ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வழங்கி கௌரவித்தார்.
- அமைதி, நல்லிணக்கம், விடுதலையை முன்னெடுக்கும் சர்வதேச தலைவர்களுக்கு தர்மசாலாவில் செயல்பட்டு வரும் காந்தி மண்டேலா அறக்கட்டளை சார்பில் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

## திட்டம்

### 1. மிஷன் இயற்கை

- தமிழக அரசுப் பள்ளிகளில் 'மிஷன் இயற்கை' என்ற பெயரிலான சுற்றுச்சூழல் திட்டத்தை செயல்படுத்த பள்ளிக் கல்வித் துறை திட்டமிட்டுள்ள நிலையில் அது குறித்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- தனியார் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து மிஷன் இயற்கை என்ற சுற்றுச்சூழல் திட்டத்தை அரசுப் பள்ளிகளில் செயல்படுத்த பள்ளிக்கல்வித் துறை திட்டமிட்டுள்ளது.